பக்கங்கள் 20+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 01 திங்கட்கிழமை 17.11.2025 | அதிர்வு 110

## திருகோணமலையில் நேற்று நடந்தது என்ன?

**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் இன்று விளக்கம்**

“திருகோணமலை கடற்கரையை அண்டிய பகுதியில் நேற்றிரவு 03



‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# திருமலையில் மீண்டும் நிறுவப்பட்ட புத்தர் சிலை

## இது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் எனத் தெரிவித்து மாநகர சபை மேயர் செல்வராஜா பொலிஸில் முறைப்பாடு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை கடற்கரையில் மாநகர சபைக்குச் சொந்தமான பகுதியில் முன் அனுமதியின்றி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டு வரும் பௌத்த வணக்கஸ்தலத்தில் மீண்டும் இன்று பிற்பகல் புத்தர் சிலை வைக்கப்பட்டு சமய வழிபாடுகள் நடைபெற்றன.


சட்ட அனுமதி இன்றி நேற்று இரவு 8 மணியளவில் இந்தப் புத்தர் சிலை இந்த இடத்தில் வைக்கப்பட்டது. எனினும், இரவு 11 மணியளவில் துறைமுகப் பொலிஸார், திருகோணமலை பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் வந்து பௌத்த பிக்குகளின் பெரும் எதிர்ப்புக்கு மத்தியில் புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றினர்.

பின்னர் இந்தப் புத்தர் சிலை துறைமுகப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இன்று நண்பகல் வரை அங்கு வைக்கப்பட்டிருந்தது.

03






M. A. Sumanthiran
2h ·

அமைச்சர் ஆனந்த விஜயபாலவும் தே. ம. ச. அரசும் பேரினவாத சக்திகளின் அழுத்தங்களுக்கு கோழைத்தனமாக அடிபணிவதை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கேவலமாகக் காண்கிறது. நேற்றிரவு அமைச்சரின் கட்டளைப்படி திருகோணமலை கடற்கரையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட சிலை பொலிசாரினால் அகற்றப்பட்ட போது, அரசாங்கம் இனவாத எண்ணமில்லாமல் சரியாக நடந்து கொள்கிறது என்று சிலர் நினைத்தார்கள். ஆனால் அப்படியல்ல என்பதை சில மணி நேரத்துக்குள்ளேயே அமைச்சர் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தினார். பாதுகாப்புக்காகவே சிலை அகற்றப்பட்டதாகவும் அது இன்று மீள நிறுவப்படும் என்றும் வெட்கமில்லாமல் அறிவித்த போதே சகல மக்களும் சமத்துவமாக நடத்தப்படுவார்கள் என்ற வாக்குறுதி காற்றில் பறக்க விடப்பட்டது. தே. ம. ச. அரசும் முன்னைய அரசுகளைப் போலவே ஒரு இனவாத, சிங்கள பௌத்த பேரினவாத அரசு என்பதை நிறுவியுள்ளது. இக் கட்சியைச் சேர்ந்த அனைத்து தமிழ் உறுப்பினர்களும், திருகோணமலை உறப்பினர் அருண் ஹேமச்சந்திரா உட்பட, உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டும்.



# தாமும் சிங்களப் பௌத்த பேரினவாத அரசு என்பதை நிரூபித்துள்ளது என்.பி.பி. அரசு!

## அருண் ஹேமச்சந்திரா உடனே பதவி விலக வேண்டும் என்றும் சுமந்திரன் சீற்றம்

"பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவும் தேசிய மக்கள் சக்தி அரசும் பேரினவாத சக்திகளின் அழுத்தங்களுக்குக் கோழைத்தனமாக அடிபணிவதை இலங்கைத் தமிழரசுக் கட்சி கேவலமாகக் காண்கின்றது. அருண் ஹேமச்சந்திரா உடனடியாகப் பதவி விலக வேண்டும்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவரது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:–

"நேற்றிரவு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் கட்டளைப்படி திருகோணமலை கடற்கரையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலை பொலிஸாரினால் அகற்றப்பட்ட போது, அரசு இனவாத எண்ணமில்லாமல் சரியாக நடந்து கொள்கின்றது என்று சிலர் நினைத்தார்கள். ஆனால், அப்படியல்ல என்பதைச் சில மணி நேரத்துக்குள்ளேயே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தினார்.

பாதுகாப்புக்காகவே சிலை அகற்றப்பட்டது என்றும், அது இன்று மீள நிறுவப்படும் என்றும் வெட்கமில்லாமல் அறிவித்த போதே சகல மக்களும் சமத்துவமாக நடத்தப்படுவார்கள் என்ற வாக்குறுதி காற்றில் பறக்க விடப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி அரசும் முன்னைய அரசுகளைப் போலவே ஒரு இனவாத, சிங்களப் பௌத்த பேரினவாத அரசு என்பதை நிறுவியுள்ளது. திருகோணமலை மாவட்ட உறுப்பினர் அருண் ஹேமச்சந்திரா உட்பட இந்தக் கட்சியைச் சேர்ந்த அனைத்து தமிழ் உறுப்பினர்களும் உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டும்." – என்றுள்ளது.

# புத்தர் சிலை விவகாரத்தில் பொலிஸ் தலையிட்டது ஏன்?

## பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளியுங்கள் என்று நாடாளுமன்றில் இன்று புலம்பிய சஜித்

திருகோணமலையில் உள்ள ஸ்ரீசம் புத்த ஜெயந்தி போதிராஜ விகாரையில் நேற்று ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையில் பொலிஸார் தலையிட்டது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார். இது வகுப்புவாத பதற்றங்களைத் தூண்டும் என்றும் அவர் எச்சரித்தார்.

பௌத்த மதத்துக்கு அனைவரும் முன்னுரிமை அளியுங்கள் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றிய அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

புத்த மதத்துக்கு முதன்மையான இடத்தை வழங்கும் அதேவேளையில், பிற மதங்களுக்கு மரியாதை அளிப்பதை உறுதி செய்யும் அரசமைப்பின் இரண்டாம் அத்தியாயத்தை மேற்கோள் காட்டி, 1951 இல் நிறுவப்பட்டு 2010 இல் புத்த விவகாரத் துறையில் பதிவு செய்யப்பட்ட



இந்தக் கோயில், வழிபாட்டுத் தலமாக சட்டபூர்வ அந்தஸ்தைக் கொண்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

புத்தர் சிலைகளை வைப்பது மற்றும் அறப்பள்ளி கட்டடங்களை நிர்மாணிப்பது தொடர்பாக உத்தரவுகளைப் பிறப்பித்தமைக்காகப் பொலிஸாருக்கு அவர் கண்டனம் தெரிவித்தார். இதுபோன்ற செயல்கள் வகுப்புவாத பதற்றங்களைத் தூண்டக்கூடும் என்றும் அவர் எச்சரித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக ஏதேனும் பிரச்சினை இருந்தால், பௌத்த பிரிவுகளின் மூன்று தலைமைப் பீடாதிபதிகளுடன் பேச்சுவார்த்தை மூலம் அதைத் தீர்க்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

"வளர்ச்சி நடவடிக்கைகளைச் சீர்குலைக்கப் பொலிஸாரை அனுப்புவது ஏற்றுக்கொள்ள முடியாதது. மேலும் அத்தகைய உத்தரவுகள் யாருடைய அதிகாரத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டன? அரசு நாட்டின் உச்ச சட்டமான அரசமைப்பைப் புரிந்துகொள்ளவில்லை என்றால், அதை மீண்டும் படிக்க வேண்டும்." – என்றும் அவர் மேலும் கூறினார்.



# திருகோணமலையில் புத்தபகவானின் புலம்பல்..!

தர்மத்தைத்தான் நான் போதித்தேன்..
அதர்மத்தை எனது பெயரால் செய்யாதீர்கள்..
காவி உடைதரிப்பது காருண்ணியம் என்றேன்.
காடைத்தனத்திற்கும் அந்த உடை தரிக்காதீர்கள்..

அன்பால் வழிபடுங்கள் அனைவரும் என்றேன்..
ஆக்கிரமிப்பு சிலையாக என்னை ஏன் மாற்றினீர்கள்..
புத்தம் சரணம் கச்சாமி என்று வணங்குங்கள் என்றேன்..
யுத்தம் கரணம் ஆசாமி என்று அடாவடி செய்யாதீர்கள்..

பௌத்தமதம் அகிம்சையும் அமைதியையும் தரும் என்றேன்..
வம்பையும் சண்டையும் தருவதுதான் என்கிறார்கள்..
கண்ட கண்ட இடத்தில் வைத்து என்னை கலங்கம் செய்யாதீர்கள் ..
கடவுளாக என்னை மதித்தால் காடைத்தனத்தை நிறுத்துங்கள்..!

புத்தர் பகவான் நான் யுத்தம் செய்ய வரவில்லை புரியுங்கள்..!
என் போதனைகளை படிக்காமல் வேதனைகளை செய்யாதீர்..
உங்களின் நில அபகரிப்புக்கு என்னை கருவியாக்காதீர்கள்..
உதாசீனம் செய்யாமல் உண்மைக்கு இடம் கொடுங்கள்..

**-அம்பிளாந்துறையூர் அரியம்-**
**17/11/2025**

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### திருமலையில் மீண்டும்...

இதேவேளை, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இன்று முற்பகல் நாடாளுமன்றத்தில் வைத்து சிலை மீண்டும் அதே இடத்தில் வைக்கப்படும் எனக் கூறினார். இதையடுத்து கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளங்கள் முகாமைத்துவ திணைக்களம், பௌத்த பிக்குமார், பொலிஸார், நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, திருகோணமலை மாவட்ட அரச அதிபர் ஆகியோர் கலந்துகொண்ட விசேட கூட்டம் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் வழங்கியிருந்த அறிவுறுத்தலின் அடிப்படையில் மீளவும் புத்தர் சிலை, அகற்றப்பட்ட அதே இடத்தில் வைக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டு இதன்படி சிலை மீள வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சட்ட அனுமதி அற்ற சிற்றுண்டிச்சாலை நேற்று அகற்றப்பட இருந்தது. ஆனால், அதனை அகற்றுவது தொடர்பில் தடையாணை உத்தரவு ஒன்றை இந்தப் பகுதி பௌத்த பிக்கு கொழும்பு உயர்நீதிமன்றத்தில் பெற்றிருந்தமையால் தாம் எதிர்பார்த்தபடி இன்று சிற்றுண்டிச்சாலை இடித்து அகற்றப்படவில்லை எனத் திருகோணமலை மாவட்ட கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளங்கள் முகாமைத்துவ திணைக்கள அதிகாரி தகவல் தெரிவித்தார்.

நேற்றுக் காலை முதல் திருகோணமலை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் உட்பட அனைத்து உயர் பொலிஸ் அதிகாரிகளும், விசேட அதிரடிப் படையினரும் இங்கு பாதுகாப்புப் பணிகள் ஈடுபட்டிருந்தனர்.

புத்தர் சிலை மீளவும் வைக்கப்படுவதற்கு சற்று முன்னர் அங்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமனவுக்கு அங்கு திரண்டிருந்த பௌத்த பிக்குமார் உட்பட சிங்கள மக்கள் அவரின் வருகையை எதிர்த்துக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து, அவரை அங்கிருந்து வெளியேறுமாறு கடுமையாகக் கோஷமிட்டனர். இதனையடுத்து அவர் அங்கிருந்து உடனடியாக வெளியேறினார்.

இது இவ்வாறிருக்க திருகோணமலை கடற்கரையில் மாநகர சபைக்குச் சொந்தமான பகுதியில் முன் அனுமதியின்றி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டு வரும் பௌத்த வணக்கஸ்தலத்தில் அடாத்தாக புத்தர் சிலை வைக்கப்பட்டமைக்கு எதிராகவும், இது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் எனத் தெரிவித்தும் திருகோணமலை மாநகர சபையின் மேயர் க.செல்வராஜா, துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் இன்று முறைப்பாடு செய்துள்ளார்.

### திருகோணமலையில்...

வைக்கப்பட்ட புத்தர் சிலை பாதுகாப்புக் காரணங்களுக்காகவே அங்கிருந்து பொலிஸாரால் அகற்றப்பட்டது. இன்று அதே இடத்தில் மீண்டும் புத்தர் சிலை வைக்கப்படும். திருகோணமலையில் அமைதியின்மை ஏற்பட இடமளிக்க முடியாது. சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது."

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, நாடாளுமன்றத்தில் இன்று முற்பகல் விளக்கமளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையியல்,

"குறித்த பகுதியில் குழப்பம் ஏற்பட்டால் புத்தர் சிலைக்குச் சேதம் ஏற்படக்கூடும் எனத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து நேற்றிரவு பொலிஸார் புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றி, சிலைக்குரிய பாதுகாப்பை உறுதிப்படுத்தினர்.

இன்று அந்தப் புத்தர் சிலையை குறித்த விகாரையில் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளோம். அத்தோடு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தால், அங்கு சட்டவிரோதமாக நடத்தப்படும் கடை ஒன்று தொடர்பிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அது தொடர்பில் பொலிஸார் நீதிமன்ற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். நீதிமன்றத் தீர்ப்பின்படியே செயற்பட வேண்டியுள்ளது.

காணி குறித்து நீதிமன்றம் வழங்கும் உத்தரவுக்கமையவே நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்குப் பின்னர் திருகோணமலையில் எந்தப் பிரச்சினையும் நடப்பதற்கான சாத்தியங்கள் இல்லை." – என்றார்.




# ஜனாதிபதி - தமிழரசு வியாழனன்று சந்திப்பு


ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்கும் இடையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குக் கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் நேரடிப் பேச்சு நடைபெறவுள்ளது.

தம்முடன் பேச்சுக்கு நேரம் ஒதுக்கித் தருமாறு தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பி வைத்த கோரிக்கைக் கடிதத்தின் அடிப்படையில் இந்தச் சந்திப்புக்கு ஜனாதிபதி செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சந்திப்புக்கான தினத்தையும், நேரத்தையும் ஜனாதிபதி செயலகம் இன்று தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனைத் தொடர்பு கொண்டு அறிவித்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர், பொதுச்செயலாளரோடு கட்சியின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாளைமறுதினம் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் பங்குபற்றவுள்ளனர்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு, மாகாண சபைத் தேர்தல், 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் மற்றும் திருகோணமலை கடற்கரையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டு வரும் பௌத்த வணக்கஸ்தலம் மற்றும் அங்கு அடாத்தாக நிறுவப்பட்ட புத்தர் சிலை ஆகியவை உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து தமிழரசுக் கட்சியினர் இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியிடம் வலியுறுத்துவார்கள் என்று தெரிகின்றது.



## யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட

# பெரும்பான்மை இன மாணவன் ஒருவர் ஹசீஸ் போதைப்பொருளுடன் சிக்கினார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ். பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட இரண்டாம் வருட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவர் நேற்று யாழ். கந்தர்மடம் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊவா, பரனகம பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய மேற்படி மாணவனிடம் இருந்து 33 கிராம் 230 மில்லிகிராம் ஹசீஸ் போதைப்பொருள் கைப்பற்றப் பட்டுள்ளது

சந்தேகநபரை இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் முற்படுத்திய வேளை எதிர்வரும் 30ஆம் திகதி வரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது

சம்வம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜே.வி.பியின் உண்மை முகம்

இலங்கைத் தீவில் பெரும்பான்மையினரான சிங்களவர்களின் மனோநிலையை ஆக்கிரமித்துள்ள பௌத்த - சிங்களப் பேரினவாத வெறித்தன மனோநிலை, அவர்களது மூளை மையத்தையே ஆகர்ஷித்து நிற்கும் உருக்குப் போன்ற இறுக்கமான இரும்பு சட்டகம் என இப்பத்தியில் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். ஆட்சித் தலைவர்கள் மாறினாலும் அரசுத் தலைமைத்துவத்தை நிரந்தரமாக ஆக்கிரமித்திருக்கும் பேரினவாதப் பண்பியல்பு மாற்ற முடியாதது என்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும் அவரது அரசினரும் திருகோணமலை விடயங்களை நேற்றும் இன்றும் கையாண்ட முறைமையின் மூலம் நிரூபித்திருக்கிறார்கள். இதுதான் சிங்களத்தின் மாறாத - மாற்ற முடியாத - பரவணிப் பண்பியல்பு என்பதைப் பல தடவைகள் இப்பத்தியில் தொடர்ந்து சுட்டிக் காட்டி வந்திருக்கின்றோம். அதுவே மீள ஒரு தடவை திருகோணமலையிலும், நாடாளுமன்றத்திலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஆளும் கட்சி மாத்திரமல்ல, எதிர்க்கட்சியில் சிங்களத்தின் பிரதிநிதியாக இருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதஸவும் இந்த விடயத்தில் தானும் அதே பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாதிக்க வெறிப்போக்கில்தான் இயங்குகின்றார் என்பதை இன்று நாடாளுமன்றத்தில் தமது உரையின் மூலம் நிரூபித்திருக்கின்றார்.

தங்கள் உரிமைகளுக்காக ஆயுத வழியிலும், இப்போது அகிம்சை வழியிலும் போராடும் தமிழ் மக்கள் பௌத்த - சிங்கள மேலாதிக்கத்தையும், தமிழர் தேசம் மீதான பேரினத்தின் ஆக்கிரமிப்பையும் அடையாளப்படுத்தும் விதத்தில் புத்தர் சிலைகள் நிறுவப்படுகின்றமையை ஆட்சேபித்து, எதிர்ப்புக் காட்டி வந்திருக்கிறார்களே தவிர, அத்தகைய புத்தர் சிலைகளுக்கு எந்தச் சமயத்திலும் தீங்கு விளைவித்தவர்களே அல்லர்.

அப்படி இருக்கையில், புத்தர் சிலையை அகற்றும் நீதியான முடிவை முதலில் எடுத்த பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர், அந்தத் தீர்மானத்திலும் முடிவிலும் உறுதியாக நிற்கும் அரசியல் துணிச்சலும், திராணியும் முதுகெலும்பும் இல்லாத நிலையில், அந்த முடிவில் இருந்து குத்துக்கரணம் அடிப்பதற்கு - அதைச் சமாளிப்பதற்கு - 'பாதுகாப்புக்காகவே நேற்று இரவு புத்தர் சிலை அங்கிருந்து அகற்றப்பட்டது, இன்று மீண்டும் அது நேற்று இரவு நிறுவப்பட்ட இடத்தில் வைக்கப்படும்' என்று விதண்டாவாதக் காரணத்தை முன்வைக்க விழைகின்றார். புத்தர் சிலையை அங்கு நிறுவுவதை எதிர்த்த மக்கள் அல்லது தரப்பினர் அதைச் சேதப்படுத்தி விடுவார்கள் என்ற பாதுகாப்பு ஆபத்துக் கருதியே புத்தர் சிலை அங்கிருந்து நேற்று இரவு அகற்றப்பட்டது என்று அவர் கூற வருகின்றார். பேரினவாத மேலாதிக்கத்தின் அழுத்தத்திற்கு முன்னால் நீதி, நேர்மையுடன் நின்று பிடிக்க முடியாமல், அதற்கு அடிபணியும் தங்களின் சின்னத்தனத்தை மூடி மறைப்பதற்கு, தமிழர் தரப்பு மீது, புத்தர் சிலையை அவர்கள் சேதமாக்கும் சாத்தியம் உள்ள தரப்பாக அபாண்டப் பழி சுமத்த முனைகின்றார் என்பதுதானே இதன் அர்த்தம்...?

ஆரம்பம் முதல் சிங்கள - பௌத்த மேலாதிக்க வெறித்தனத்தில் ஊறித் திளைத்து, தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிக்க கங்கணம் கட்டி செயற்பட்ட - 'தேசிய மக்கள் சக்தி' என்று முலாம் பூசிக்கொண்டு புதிய முகத்தோடு வந்த - ஜே.வி.பியையும் அதன் தீய உள்ளடக்கத்தையும் புரிந்து கொள்ளாமல் அதை ஆதரித்த தமிழர்களுக்கு இப்போதாவது உண்மை புரிய வேண்டும். ஜே.வி.பியின் முகத்திரையைக் கிழித்து அதன் உண்மை சொரூபத்தை திருமலைச் சம்பவங்கள் அம்பலப்படுத்தியிருக்கின்றன என்பது மட்டும் உண்மை.

# மாகாணசபை முறைமைத் திருத்தத்தை அரசு நிறைவேற்றாது இழுத்தடிப்பது ஏன்?

## முன்னாள் மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் கேள்வி

(பழுவூரான்)

மாகாணசபை முறைமை தொடர்பில் சிறியதொரு திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவது தற்போதைய அரசுக்குச் சின்னதொரு விடயம். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இருக்கின்றது. பத்து நிமிடத்தில் நாடாளுமன்றத்தில் தீர்மானத்தை எடுத்து நடைமுறைப்படுத்த முடியும். மாகாணசபைத் தேர்தலை நடத்தாது இழுத்தடிக்குமாக இருந்தால் வடக்கு – கிழக்கு மக்களுக்குத் துரோகம் செய்யும் கட்சியாகவும், மக்கள் கைகளில் அதிகாரம் செல்வதை விரும்பாத ஒரு கட்சியாகவும் தேசிய மக்கள் சக்தி இருக்கும் என்று கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சிரேஷ்ட தலைவருமான இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று ஞாயிற்றுக் கிழமை (16) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாணசபை முறைமை என்ற விடயத்தில் பலருக்குப் பல குழப்பங்கள் இருக்கின்றன. இந்த மாகாணசபை முறைமை என்பது மக்களின் காலடிக்கு அதிகாரங்களைக் கொண்டு செல்லுகின்ற விடயம். இது விடுதலைப் புலிகளுக்கோ, தமிழரசுக் கட்சிக்கோ, ஈழமக்கள் விடுதலை முன்னணிக்கோ கொடுக்கப்படுகின்ற அதிகாரம் அல்ல. அந்த கட்சிகளும் அதிகாரங்களைக் கோரவில்லை. அவை கேட்பது மக்களுக்கு இலகுவாக அதிகாரங்கள் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதையே.

கடந்த இருபத்தைந்து முப்பது வருட காலமாக இலங்கையில் அனைத்து பாகங்களிலும் மாகாணசபை முறைமையூடாக நியதிச் சட்டங்கள் உருவாக்கப்பட்டு அதிகாரங்கள் மக்கள் காலடிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளமை வரலாறாகும்.



ஆனால் துரதிர்ஷ்டவசமாக வடக்கு – கிழக்கு மாகாணங்களில் வெறுமனே ஐந்து நியதிச் சட்டங்களே உருவாக்கப்பட்டுள்ளன. வடமத்திய, மேல் மாகாணங்களை எடுத்துக் கொண்டால் சுமார் 80 இற்கும் மேல் நியதிச் சட்டங்களை உருவாக்கியுள்ளன.

அதிகமான நியதிச் சட்டங்கள் உருவாக்கப்படும் போது தாமாகவே அந்த அதிகாரங்கள் மக்கள் வசம் பரவலாக்கப்படும். எனவே மக்களுக்கு அதிகாரம் தேவை என்றால் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசைப் பொறுத்தவரையில் தமிழர்களைப் போன்று கடந்த காலங்களில் ஆயுதம் ஏந்திப் போராடிய கட்சி என்ற ரீதியில் தமிழ் மக்களின் உணர்வுகளையும், ஜனநாயகத்தையும், தமிழ்த் தேசியத்தையும், தமிழர் உரிமை தொடர்பான விடயங்களையும் ஏற்றுக் கொண்ட கட்சியாக இருந்தால் குறைந்த பட்சம் மாகாணசபை முறைமை ஊடாகவாவது தமிழ் மக்களுக்கான அரசியல் அதிகாரத்தை அமுல்படுத்த முன்வர வேண்டும்.

இது அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்ட ஒரு விடயம். இதில் புதிதாகக் கொண்டு வருவதற்கு உரிய தேவை இல்லை. இதனை அமுல்படுத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

நல்லாட்சி முறைமைக்கான தலைமைத்துவம், ஊழல் ஒழிப்பு, மோசடி இல்லாத நிருவாகம், போதைவஸ்துக்கு எதிரான விடயங்கள் என்று சொல்லும் உங்களின் நல்ல முகத்தைப் பார்ப்பதால் நாடாளுமன்றத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்து அடுத்த வருடத்தில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுங்கள்.– என்றார்.

# செட்டிபாளையம் மாணவனுக்கு ஆஸ்திரேலியத் தூதர் கௌரவம்!

சமூகப் பொறுப்புடன் ஆஸ்திரேலியா அரசும் இலங்கை கல்வி உயர்கல்வி மற்றும் தொழில்கல்வி அமைச்சும் இணைந்து செயற்படுத்திய, சட்டவிரோதமாகஆஸ்திரேலியாவுக்குக்கடல்மார்க்கமாக செல்வதற்கு முயற்சிப்பதை தடுக்கும் நோக்குடனான தேசிய ரீதியில் ஒழுங்கு செய்யப்பட்ட ஓவியப் போட்டியில் செட்டிபாளையம் மகா வித்தியாலய மாணவன் புவிதரன் சஞ்ஜய்வன் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம் பெற்றுள்ளார்.



இதனை கௌரவித்து இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதர் பாராட்டுச் சான்றிதழும் மூன்றாம் நிலை தொழில் கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்ட எந்த ஒரு நிறுவனத்திலும் கல்வி கற்க கூடிய 20000 ரூபா புலமைப் பரிசில் விருதிதையும் மற்றும் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட ஆக்கங்களுடன் கூடிய இதழையும் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் வைத்து சனிக் கிழமை(15) வழங்கி கௌரவித்தார்.



# பருத்தித்துறை நகர சபைக்கு எதிராக கொட்டடி மக்கள் இன்று போராட்டம்!

யாழ்ப்பாணம் வடமராட்சி பருத்தித்துறை நகரசபைக்கு எதிராக பருத்தித்துறை கொட்டடி மக்கள் போராட்டம் ஒன்றை இன்று (17) காலை முன்னெடுத்துள்ளனர்.

கொட்டடி மீனவர்களின் படகு தரிப்பிடத்துக்காகத் தூர்வார்ப்பட்ட மண்ணை இதுவரை அகற்றிவில்லை என தெரிவித்தே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதில் குறித்த மண்ணை அகற்றுமாறு கோரி தவிசாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த தவிசாளர் உடனடியாக மணல் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பார் என்று தெரிவித்தார்.







# ஆழமாக பார்க்கப்பட வேண்டிய மலையக சம்பளப் பிரச்சினை!

**மு.நிமியா**
**(ஊடகக்கற்கைகள் துறை,**
**யாழ்.பல்கலைகழகம்)**

போராட்டமின்றிய சம்பள உயர்வு, அரசு மலையக மக்களுக்கு பெற்றுகொடுத்துள்ள சலுகை எனப் பல பேசு பொருள்களுடன் சூடு பிடித்துள்ளது. மலையக மக்களின் சம்பளப் பிரச்சினை. 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை பார்த்த போது சில காலங்களுக்கு பின் மீண்டும் ஒருமுறை "மலையக சம்பள பிரச்சினை" என்ற வார்த்தை என் காதுகளை எட்டியது.

மலையக மக்களின் சம்பள பிரச்சினை என்பது இன்று, நேற்றுப் பேசப்படும் புதிய விடயமல்ல. மலையக மண்ணில் வாக்கு கேட்டுவரும் எந்தவொரு அரசியல்வாதியின் வாயிலிருந்தும் இந்த வார்த்தை வராமல் இருந்ததில்லை. சில வருடங்களாக 1,700 ரூபா தருவதாகச் சொன்னார்கள். இப்போது 1,750 ரூபாவை 2026 ஆம் ஆண்டிலிருந்து தருவார்களாம். வார்த்தையிலாவது சம்பளத்தை அதிகரிப்போம் என்று கூறுகிறார்களே என்ற சந்தோசத்தோடு , பக்கத்து விட்டு தவமணி அக்காவிடம் பேச்சு கொடுத்தேன்.

அவர் அப்போதுதான் வேலை முடிந்து வீட்டுக்கு வந்தார். தனது படங்கை அவிழ்த்துக் கொண்டிருந்தார். அவரின் இடது பக்க காலில் அட்டை கடித்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அதை துடைத்த படி "என்ன சம்பளம் கூட்டித் தாராங்களாமே, உண்மையா?"என்றார். ஆமாம் அக்கா என நான் பதிலளித்தேன்.

அத்துடன் முடிந்துவிடவில்லை. மீண்டும் ஒரு தேநீருடன் அந்த உரையாடல் தொடர்ந்தது.

அக்கா எத்தனை வருடம் நீங்க தேயிலை தோட்டத்துல வேலை செய்றீங்க? ஏன் தேயிலை தோட்டத்துக்கு வேலைக்கு போனீங்க? என்று கேட்டேன்.

நான் 1993 தொடக்கம் கிட்டத்தட்ட 32 வருடங்களுக்கு மேலாக தோட்டத்து தொழில செய்கிறேன். யாராவது பிடிச்சி இந்த தொழிலுக்கு போவாங்களா?. படிக்க முடில, குடும்பத்தில் கஸ்டம். அந்த காலத்துல வேறு தொழில் இல்லை. இந்த தொழிக்கு வந்து விட்டோம்.

அரசு 2026 ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் தேயிலை தோட்டத்தில் வேலை செய்கின்றவர்களுக்கு சம்பளத்தை அதிகரித்து தருவதாக கூறுகிறது. இது குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீங்க?

சம்பளம் அதிகரித்தால் சந்தோஷம் தான். அதிலும் அரச நிதி ஒதுக்கி 200 ரூபா தந்து கம்பனியிடம் பேசி 200 ரூபா போட்டு மொத்தமாக 400 ரூபா அதிகரிப்பதாக கூறியுள்ளது.

ஆனால் அது எங்கள் கைகளில் இன்னும் கிடைக்கவில்லை. ஜனாதிபதி பண்டாரவளையில் தனது உரையில் இவ்விடயத்தை கூறியிருந்தார். இதற்கு முன்னரும் இவ்வாறான வாக்குறுதிகள் பல வழக்கப்பட்டன. அவை நடைமுறைக்கு வரவில்லை. இப்போதாவது வரவு - செலவு திட்டத்தில் கூறியுள்ளார். வெளிபோர்வைக்கு இல்லாமல் உண்மையான சம்பள அதிகரிப்பு நடக்கும் என நம்பிதான் பால்சோறு சமைத்துக் கொண்டாடினோம் என்றார்.

கடந்த வருடம் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டதல்லவா?. இந்தச் சம்பள பிரச்சனையில் ஒரு தோட்டத் தொழிலாளி என்ற ரீதியில் உங்களது கண்ணோட்டம் என்ன? என்றேன்.

தற்பொழுது எங்களது ஒருநாள் சம்பளமாக 1350 ரூபாய் காணப்படுகிறது. இதற்கு முன்னர் எங்களுக்கு நாளாந்த கொடுப்பனவாக ஒரு நாளைக்கு 750 ரூபா தரப்பட்டது. இதற்கு மேலதிகமாக 18 நாள்கள் தொடர்ச்சியாக ஒரு மாதத்தில் வேலை செய்யும்போது ரேட்டு கொடுப்பனவாக ஒரு நாளைக்கு 250 ரூபா மேலதிக கொடுப்பனவு கிடைக்கும். ஆகவே ஒரு நாளுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் கிடைக்கக் கூடிய நிலை இருந்தது. எனினும் தற்சமயம் அந்தக் கொடுப்பனவு நீக்கப்பட்டு ஒரு நாளுக்கு 1350 ரூபா சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது.

தொடர்ச்சி ▼

# ஆழமாக பார்க்கப்பட வேண்டிய மலையக சம்பளப் பிரச்சினை!

தொடர்ச்சி ▲

மேலோட்டமாகப் பார்க்கும் ஒரு நபருக்கு 750 ரூபாவில் இருந்து 1350 ரூபாவாகச் சம்பளம் அதிகரித்துள்ளது என தெரிந்தாலும் கூட, இந்த 1350 ரூபாவை ஒரு நாள் சம்பளமாகப் பெற வேண்டுமாயின் நாங்கள் கட்டாயமாக 18 கிலோவுக்கு மேற்பட்ட தேயிலைக் கொழுந்தினை பறித்து அந்த நாளில் வழங்குதல் வேண்டும் .

750 ரூபா சம்பளமாக பெற்றுக் கொண்ட காலப் பகுதியில் 18 கிலோவுக்குக் குறைவான கொழுந்தை எடுத்தாலும் கூட அன்றைய நாளுக்கான சம்பளம் வழங்கப்பட்டது. எனினும் 1350 ரூபா வழங்கப் பட்ட பின்னர் 18 கிலோவுக்குக் குறைவாக எடுக்கும் பட்சத்தில் அரை நாளுக்கான சம்பளமே வழங்கப் படும். மிகுதியை மேலதிக கொழுந்தாக கணக்கிட்டு, ஒரு கிலோவுக்கு நாற்பது ரூபா வீதம் வழங்கப்படு கிறது. இது முன்னை கொடுப்பனவை விட பெரு மளவிலான நட்டத்தையே எங்களுக்குத் தருகிறது என்றார்.

அண்மையில் சம்பள கொடுப்பனவுகள் அதி கரித்தாலும் அதன் உண்மையான வெகுமதிகளை நீங்கள் அனுபவிக்க முடியாமல் இருப்பதற்கான காரணங்கள் என்ற என்றதுக்கு,

சம்பள பிரச்சினை பற்றி பேசுவோர் நாளொன் றுக்கான அடிப்படை சம்பளத்தை அதிகரிக்க மட்டுமே பேசுகின்றனர். கட்டாய கொழுந்து நிறையை நிர்ண யித்தல் மற்றும் மாதமொன்றின் வேலை நாள்களை மட்டுப்படுத்துதல் ஆகியன எங்கள் மொத்த சம் பளத்தை குறைக்கின்றன. மேலும் ஆரம்ப காலங் களில் இருந்த விலைவாசிக்கும் தற்பொழுது உள்ள விலைவாசிக்குமான வித்தியாசம் எங்களது சம்பள உயர்வின் தேவையை உணர்த்துகிறது என்றார்.

பிடிமான கொழுந்து என்றால் என்ன? அதற்கு உங்களது சம்பளத்துக்கும் ஏதேனும் தொடர்புகள் உண்டா என்ற கேள்விக்கு,

பிடிமான கொழுந்து என்பது நாங்கள் எடுக்கும் கொழுந்தில் குறிப்பிட்ட தொகையை இலவசமாக கொடுத்தல் வேண்டும். அதாவதுஒரு நாளைக்கு நாங்கள் மூன்று முறை தேயிலை நிறையை அளப் போம். அச்சமயத்தில் ஒவ்வொரு நிறுவையின் போதும் இரண்டு கிலோ வீதம் இலவசமாக தோட்ட நிர்வாகத்துக்குக் கொடுத்தல் வேண்டும்.

மொத்தமாக ஒரு நாளைக்கு ஆறு கிலோகிராம் கொழுந்தை நாங்கள் இலவசமாக எங்களது புத்தகப் பதிவில் இல்லாமல் நிர்வாகத்துக்குக் கொடுத்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக மழைக்காலங் களில் தண்ணீர் கொழுந்தில் படியும் என்பதால் கூடுதலான பிடிமான கொழுந்தை அவர்கள் பிடிப் பது வழக்கம். நாங்கள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் இப்பிடிமான கொழுந்தை அவர்க ளுக்கு வழங்க வேண்டும். ஆகவே எங்களது அடிப் படையான சம்பளத்துக்கு அளவிடப்படும் அளவீட் டில் இருந்து கொழுந்து குறைவதற்கான சாத்தியப் பாடுகள் இதில் காணப்படுகின்றன. மறைமுகமாக இந்தக் காரணியும் சம்பளத்தில் செல்வாக்கு செலுத்து கிறது.

**பிடிமான கொழுந்தை எதற்காக தோட்ட நிர்வாகங்கள் பயன்படுத்துகின்றன?**

தோட்ட நிர்வாகத்தில் தேயிலை பறிப்பதற்கு மேல திகமாக தேயிலை தோட்டத்தில் உள்ள மலைகளை துப்புரவு செய்வதற்காகவும், தோட்டத்தில் உயர் அதி காரங்களுக்கு பணிபுரிவதற்காகவும் (காவலாளி, வீட்டுத்தோட்ட பராமரிப்பாளர்), தேயிலையைப் பொதியிட்டு எடுத்துச்செல்லவும் (சாக்கு பிடித்தல்) தொழிலாளர்கள் காணப்படுவர். அவர்களுக்கும் சேர்த்து நாங்களே தேயிலை பறித்தல் வேண்டும். அவர்களுக்கு நாளாந்த சம்பளம் வழங்குவதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு தேயிலை கொழுந்தைக் கொடுத்தல் வேண்டும். இதற்காகவே பிடிமானக் கொழுந்தை எங்களின் உழைப்பிலிருந்து பிடிக்கப்படுகிறார்கள் என்றார்.

கூட்டு ஒப்பந்தங்கள் தொடர்பில் அவர் தெரி விக்கையில்,

எல்லாம் பழகிய அரசியலே. காலம் காலமாக கூட்டு ஒப்பந்தம் என்ற பெயரில் சம்பள பேச்சுவார்த்தைகள் பேசப்படுகின்றன. எனினும் அதற்கான சரியான தீர்வுகள் எட்டப்படுவதில்லை. இலங்கைக்கு அந்நிய வருவாயைத் தேடித் தரும் முக்கிய ஒரு தொழிலாக தேயிலைத் தொழில் காணப்படுகின்றது. அண்மையில் தேயிலை உலக சந்தையில் மிகவும் உயர்வு விலை யில் விற்கப்பட்ட போதும் தனியார் கம்பனிகள் அதற் காக உழைக்கும் தொழிலாளர்களுக்கு எனது சம்ப ளத்தை அதிகரித்து தரவில்லை. தனியாக தாமா கவே அதன் இலாபத்தை அனுபவிக்கின்றன. குத்த கைக்கு விடப்பட்ட காரணத்தால் அரசும் இதனைக் கருத்தில் கொள்வதில்லை. எனினும் இந்த அரசு குறிப்பிட்ட மானிய தொகையை (ரூபா 200) சம்பளத துடன் சேர்த்து தர முனைவதானது வரவேற்கத்தக்கது. எனினும் நடைமுறை சாத்தியமாகும் வரையில் இதுவும் கேள்விக்குரிய விடயமே.

என்னுடைய அனுபவத்தில் நான் அனுபவிக் காத சங்கடங்களே கிடையாது. ஐந்து முறை குளவி கொட்டுக்கு உள்ளாகியுள்ளேன். அதே நேரத்தில் காலையில் சென்றால் மாலை வரையில் மலை யிலேயே இருத்தல் வேண்டும். மலசலகூட வசதிகள் கிடையாது. அட்டைக் கடிகளுக்கு நடுவில் கொட்டும் மழையிலும் பொசுக்கும் வெயிலிலும் பணிபுரிதல் கட்டாயமானது. எங்களது உயிரையும் உடலையும் அர்ப்பணித்து இந்தத் தொழிலுக்கு நேர்மையாகவே பணிபுரிகிறோம். எங்களுக்கு உரிய சம்பளத்தை நாங்கள் கேட்பதில் என்ன பிழை. அதனை அனுப விப்பவர்களுக்கு மட்டுமே எங்கள் வேதனை புரி யும். சொகுசாக அமர்ந்து வாயால் பேரம் பேசு வோருக்கு இந்த நிலை புரிவது கடினம் தான்.

தற்சமயம் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக் கையானது வெகுவாக குறைந்து கொண்டு வரு கிறதே என்று கேட்டதுக்கு,

இவ்வளவு பிரச்சினைகளுக்கும் மத்தியி லேயே நாங்கள் வேலை செய்கிறோம். எங்க ளுக்கு உரிய சம்பளமும் கிடையாது. அப்படி இருக்கும் போது இளைய தலைமுறை இதில் வராமல் இருப்பது நல்லது. என்னுடைய மகளையோ மகனையோ எப் பொழுதும் நான் இத்தொழில் ஈடுபடுத்த விரும்பிய தில்லை. அவர்கள் நல்ல அரச தொழிலில் இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். நான் மட்டுமல்ல தோட்டத்து தொழிலாளியாக இருக்கும் ஒவ்வொரு பெண்ணுமே தான் பெற்று கஷ்டத்தை தனது பிள்ளைகள் பெற கூடாது என்பதையே விரும்புவர்.

எங்களது காலத்தில் எங்களது பெற்றோர்கள் எங்களுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்பை வழங்க வில்லை. அதனாலையே நாங்கள் இன்னும் இந்த நிலையில் உள்ளோம். உங்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது இதனை பயன்படுத்துங்கள் என் றார்.

ஒன்றுக்கூடி பாற்சோறு பொங்கி கொண் டாடுதல் மட்டுமல்ல. ஒவ்வொரு அபிவிருத்தியின் போதும் இதனுடன் தொடர்புடைய அடிமட்ட மக்க ளின் உள்ளீடுகளும், கலந்துரையாடல்களும் எவ்வளவு அவசியம் என்பதை இந்த உரையாடலில் நான் உணர்ந்தேன். இந்த உரையாடலுடன் என் கையில் இருந்த தேநீரும் முடிந்தது.



# கல்முனையில் இயந்திரப் படகுகள் சேதமானமைக்கு ஒலுவில் துறைமுகம் மூடிக் கிடப்பதே காரணமாம்!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு மற்றும் காற்றால் கல்முனை கடற் பிராந்தியத்தில் பல இயந்திரப் படகுகள் சேதமடைந்துள்ளன. இதற்கு ஒலுவில் துறைமுகம் செயற்பாடின்றி மூடிக் கிடப்பதே காரணம் எனஎன்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மீனவர் சமூக பிரதிநிதியும் சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் பிரதான இயக்குநருமான அஸ்வர் அப்துர் சலாம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை (15) சீரற்ற காலநிலை காரணமாக காற்றால் அடித்துச் செல்லப்பட்டு, சாய்ந்தமருது பிரதேசத்தில் கரையொதுங்கிய படகு ஒன்று மீட்கப்பட்ட நிலையில், அங்கிருந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காலத்துக்குக் காலம் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்படும் கடல் கொந்தளிப்பிலும் காற்றிலும் சிக்குண்டு பெறுமதியான இயந்திரப் படகுகள் சேதமடைகின்றன. தற்போது காற்றில் அடித்து வரப்பட்டு, சேமடைந்துள்ள இந்த இயந்திரப் படகானது சுமார் ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதியானதாகும்.

அம்பாறை மாவட்டத்தில் சுமார் 300 இயந்திரப் படகுகள் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றன. ஆனால் இவற்றைக் கடலில் பாதுகாப்பாகத் தரித்து வைப்பதற்கென ஒரு மீன்பிடித் துறைமுகமோ படகுத் தரிப்புத் துறையோ கிடையாது.

இதனாலேயே இந்த இயந்திரப் படகுகள் பாதுகாப்பற்ற முறையில் கடலில் அங்கும் இங்குமாக நங்கூரமிடப்பட்டு, நிறுத்தி வைக்கப்படுகின்றன.

ஒலுவில் துறைமுகம் கடந்த 10 வருடங்களாக மூடிக் கிடக்கின்றது. இதனால்தான் மீனவர் சமூகத்தினருக்கு இந்த அவலம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பாரிய நஷ்டங்களுக்கும் கஷ்டங்களுக்கும் படகு உரிமையாளர்கள் முகம் கொடுத்து வருகின்றனர். இதனால் மீனவர்களின் வாழ்வாதாரமும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது.

ஆகையால் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக, இந்த விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு, இந்தப் பிராந்திய மீனவர் சமூகத்தின் நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கி, அவர்களது கண்ணீர் துடைக்க முன்வர வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.- என்றார்.




# இலங்கை அதிபர் சேவையில் தரம் மூன்றுக்கு விண்ணப்பம் கோரல்

( வி.ரி. சகாதேவராஜா)

இலங்கை அதிபர் சேவை தரம் மூன்றுக்கு நியமனத்துக்கான விண்ணப்பங்கள் போரப்பட்டுள்ளன.

கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியில் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பத் தகைமையாக பட்டதாரி நியமனம், கல்விமாணிப் பட்டதாரி பட்டம்பெற்ற ஆசிரியர்கள், 05 வருட சேவை அனுபவம், அல்லது கல்வியியல் கல்லூரி அல்லது ஆசிரியர் கல்லூரி பயிற்றப்பட்ட ஆசிரியர், 06 வருட சேவை அனுபவம் பெற்ற 50 வயதுக்கு உட்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும்.

டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் 1200 ரூபா விண்ணப்பக் கட்டணமாகச் செலுத்தி விண்ணப்பிக்க முடியும்.

போட்டிப் பரீட்சையானது தேசிய ரீதியாக மாவட்ட நிலையங்களில் நடைபெறும்.



# பூமி கொடுத்த பரிசு 7 சுடுநீர் கிணறுகள்!

**கி. டினுஜிக்கா**
**(ஊடக கற்கைகள் துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்)**

இயற்கை தான் தன்னுள் எத்தனை அற்புதங்களை ஒழித்து வைத்திருக்கின்றது. பூமியில் உள்ள நீர்நிலைகள், காடுகள், வனங்கள், கடற்கரைகள், எரிமலைகள், சோலைகள் என அனைத்துமே இயற்கையின் பொக்கிஷங்கள் இவ்வாறான இயற்கையின் அதிசயங்களில் ஒன்று வெந்நீர் ஊற்றுக்கள்.

வெந்நீர் ஊற்றுகள் எனப்படுவது புவியின் மேலோட்டில் உள்ள நிலத்தடி நீர் புவியின் வெப்பத்தின் காரணமாக சூடேற்றப்பட்டு சுடுநீராக ஊற்றெடுக்கும் போது அந்த இடம் வெந்நீர் ஊற்று என அழைக்கப்படுகிறது. இவை வெவ்வேறு அளவிலான ஓட்டங்களையும் பல்வேறு தாது உப்புக்களின் கலவையையும் கொண்டிருக்கும். உலகின் சில பகுதிகளில் எரிமலை செயல்பாடுகள் இடம்பெறும் இடங்களுக்கு அருகில் இவ்வாறான நீரூற்றுக்கள் காணப்பட்டாலும் எரிமலை இல்லாத பகுதிகளிலும் ஆழமான நிலத்தடி நீரூற்றுக்கள் புவி வெப்பத்தால் சூடாகி வெந்நீராக வெளியேறுவதும் உண்டு.

இந்த வெந்நீர் ஊற்றுக்கள் உருவாவதற்கு பிரதான காரணம் புவி வெப்பச்சரிவு விகிதம் ஆகும். நிலத்தடி நீர் பூமிக்கு அடியில் இருக்கும் போது அது படிப்படியாக சூடான பாறைகளுடன் தொடர்பு கொள்கிறது. மழை நீர் அல்லது மேற்பரப்பில் உள்ள நீர் பாறைகளின் பிளவுகள் மற்றும் துளைகளின் வழியாக புவியின் ஆழமான அடுக்குகளுக்குள் ஊடுருவுகிறது. பூமியின் ஆழத்தில் வெப்பநிலை கணிசமான அளவு அதிகமாக இருக்கும். அங்கு தேங்கும் நிலத்தடி நீர் சுற்றியுள்ள சூடான பாறைகளின் வெப்பத்தால் அதிக வெப்பநிலையை அடைகிறது. இந்த சூடான நீர் புவியின் மேலோட்டில் உள்ள பிளவுகள் அல்லது பலவீனமான பகுதிகள் வழியாக குறைந்த அமுத்தம் உள்ள பகுதிகளுக்குள் தள்ளப்பட்டு வெந்நீராக புவியின் மேற்பரப்பில் ஊற்றெடுக்கிறது. இங்கு நீரின் வெப்பநிலை அது எவ்வளவு ஆழம் சென்றது மற்றும் எவ்வளவு வேகமாக வெளியேறுகிறது என்பதைப் பொறுத்து மாறுபடும்.

இந்த உலகம் முழுவதும் சுமார் 1000 வெந்நீர் ஊற்றுங்கள் இருக்கின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் சுமார் 50 வீதம் அமெரிக்காவில் உள்ள வயோமிங்கு என்னும் இடத்தில் உள்ள யெல்லோஸ்டோன் தேசியப் பூங்கா என்ற இடத்திலேயே இருப்பதாகவும் கூறப்படுகின்றது. அதிலும் அகில உலகரீதியில் பிரதானமான மற்றும் அழகிய வெந்நீர் ஊற்றுக்கள் கிட்டத்தட்ட பதினைந்து உள்ளன. அவை முறையே துருக்கியில் உள்ள பமுக்கலே வெந்நீர் ஊற்று, ஹிமாச்சல் பிரதேசத்தில் உள்ள கீர் கங்கா, ஐஸ்லாந்தில் உள்ள ப்ளூ லகூன், அமெரிக்காவில் உள்ள செனா ஹாட் ஸ்ப்ரிங்ஸ், அமெரிக்காவின் வாயோமிங்கில் உள்ள கிராண்ட் பிரிஸ்மாட்டிக் ஸ்ப்ரிங், அந்தார்டிக்காவில் டிசப்ஷன் ஐஸ்லேண்ட், சீனாவில் உள்ள ஹுவாங் லாங் தேசிய பூங்கா, இத்தாலியின் டெர்மெ டி சட்டர்னியா, க்ரீன்லாந்தில் உள்ள யுனார்டோக் தீவு, ஜாப்பனின் குரோகாவா ஆன்சென், கலிபோர்னியாவின் டிராவர் டைன்ஹாட் ஸ்ப்ரிங்ஸ், ஷாம் பெயின் பூல், டன் டன் வெப்பநீரூற்று, டெர்மாஸ் ஜியோமெட்ரிக்ஸ் என்பவையே ஆகும்.

இலங்கையைப் பொறுத்த வரையில், பல வெந்நீர் ஊற்றுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் மகா ஓயா, மரங்கல, கீரிமலை (யாழ்ப்பாணம்), கல்வெள, மகசியம்பலாகம, வேலிகந்த, மஹ பெல்லஸ்ஸ மற்றும் திருகோணமலை – கன்னியா போன்ற இடங்களில் உள்ள வெந்நீரூற்றுக்கள் குறிப்பிடத்தக்கவை. இவற்றில், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கன்னியா வெந்நீரூற்று இன்றளவிலும் மிகவும் பிரசித்தி பெற்ற ஒன்றாகத் திகழ்கிறது.

### திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்று

கன்னியா வெந்நீரூற்று, இலங்கையின் கிழக்குப் பகுதியிலுள்ள திருகோணமலை மாவட்டத்தில், கன்னியா கிராம சேவகர் பிரிவில் இது அமைந்துள்ளது. இது திருகோணமலை நகரில் இருந்து சுமார் 8 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இந்த இடத்தில், 90 முதல் 120 செ.மீ. ஆழமுடைய ஏழு சிறிய சதுர வடிவான கிணறுகள் அமைந்துள்ளன. இயற்கையாக உருவான இந்த வெந்நீரூற்றில், நாளடைவில் செயற்கைக் கிணறுகள் கட்டப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கிணற்றிலும் வெவ்வேறு வெப்பநிலையில் நீர் ஊறி வந்து கொண்டிருப்பதும், சமய நம்பிக்கை அடிப்படையிலும் விஞ்ஞான ரீதியிலும் பல சிறப்புகளைப் பெற்று தனித்துவமாக இது விளங்குகின்றது. கன்னியாவில் மொத்தமாக ஏழு வெந்நீர் உற்றுக்கள் காணப்படுகின்றன. அந்த ஏழு வெந்நீர் ஊற்றுக்களிலும் வித்தியாசமான வெப்பநிலைகள் உணரப்படுகின்றது.

இந்த வெந்நீரூற்றின் வரலாறு பற்றி பார்க்கும் போது, இந்த வெந்நீர் ஊற்றானது கன்னிகை தீர்த்தம் அல்லது குமரி தீர்த்தம் என புராண கதைகளின் படி அழைக்கப்படுகின்றது. புராணக் கதைகளின் படி இராவணனோடு தொடர்புடையதாக ஒரு கதை ஒன்று கூறப்படுகின்றது. ராவணனுடைய தாயார் உயிர் நீத்த போது அவருடைய இறுதி கிரியைகளை செய்வதற்காக அந்தணர் வடிவெடுத்த விஷ்ணு பகவானால் தடி கொண்டு ஏழு இடங்களில் ஊன்றினார். அந்த மகாவிஷ்ணு இடங்களில் இருந்து நீரூற்றுக்கள் வெளியேறின. இவ்வாறே இந்த ஏழு வெந்நீரூற்றுக்களும் உருவானதாக புராண கதைகள் கூறுகின்றது. அதேநேரம் சைவ மரபின்படியும் இறந்தவர்களுக்கு பிதிர் கடன் செய்யும் இடமாக பல ஆண்டுகளாக இது காணப்பட்டதாகவும் குறிப்புகள் கூறுகின்றது.

இவ்விடத்தில் அந்தியேட்டி கடமைகள் செய்யப்படின் அந்த ஆன்மாக்கள் முத்தி அடையும் என்ற நம்

தொடர்ச்சி ▼

# பூமி கொடுத்த பரிசு 7 சுடுநீர் கிணறுகள்!

தொடர்ச்சி ▲

பிக்கையும் மக்களிடையே காணப்படுகின்றது. 1798ல் "ரொபட் பர்சிவல்" எனும் வைத்தியர் இலங்கை பற்றி எழுதிய நூலில் கன்னியாவிலுள்ள 7 வெந்நீரூற்றுக்கள் பற்றியும் எழுதியுள்ளார். இதில் அந்த ஏழு வெந்நீர் ஊற்றுக்களின் வெப்பநிலை98பாகை பரணைட் முதல் 106பாகை பரணைட் வரை (36.6பாகை செல்சியஸ் - 41.38 பாகை செல்சியஸ்) இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அண்மைய ஆய்வுகளின் படி இன் வெந்நீரூற்றுக்களின் வெப்பநிலை 42 பாகை செல்சியஸ் முதல் 55 பாகை செல்சியஸ் வரை வேறுபடுவதாக குறிப்பிடப்படுகின்றது. வெந்நீரூற்றுக்களில் உள்ள நீரில் கனிமங்கள் மற்றும் தாது உப்புக்கள் கலந்திருப்பதால், இதில் நீராடுவது சரும நோய்கள், மூட்டு வலி போன்ற பல நோய்களுக்கு மருந்தாகும் என்ற நம்பிக்கை மக்களிடையே உள்ளது. கன்னியா வெந்நீரூற்றின் நீரும் மருத்துவப் பயன் கொண்டதாகக் கருதப்படுவதால், இது சுற்றுலாத் தலமாக மட்டுமல்லாமல், உடல்நல சிகிச்சை மையமாகவும் பார்க்கப்படுகிறது.

2011 ஒக்ரோபர் 9 ஆம் திகதி வெளியிட்ட அரச வர்த்தமானியில் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக கன்னியா வெந்நீர் ஊற்று அறிவிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு முதல் தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இது உள்ளது.

கன்னியா வெந்நீரூற்றுப் பகுதி, வரலாற்று ரீதியாக இந்துக்களின் வழிபாட்டுக்கு உரிய இடமாகப் போற்றப்பட்டாலும், அண்மைக் காலங்களில் இந்தப் பகுதியில் பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் நடப்பதாகவும், அதன் காரணமாகத் தமிழர்களின் கலை, கலாசாரப் பொக்கிஷங்களுக்கான இடம் மறுக்கப்பட்டு வருவதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

தொல்பொருள் திணைக்களமும் இதனை அநுராதபுர காலத்தைச் சேர்ந்த பௌத்த இடிபாடுகளைக் கொண்ட தனித்துவமான இடமாக அடையாளப்படுத்தியுள்ளது. இதனால், இந்தத் தொல்லியல் மற்றும் வரலாற்றுப் பகுதியின் அடையாளத்தைப் பாதுகாப்பது ஒரு பெரிய சவாலாக உள்ளது.

இதேநேரம் இங்கு வரும் சுற்றுலா பயணிகளில் சிலர் நீராடும் போது வெந்நீர் ஊற்றில் சோப்பு அல்லது ஷாம்பூ பயன்படுத்துவதால் இயற்கையான நீரின் சமநிலை பாதிக்கப்படுகிறது.

வெந்நீர் ஊற்றுக்கள் புவியின் ஆழத்தில் உள்ள புவிவெப்ப ஆற்றலின் வெளிப்பாடாக விளங்கும் இயற்கை அதிசயங்கள் ஆகும் . இவை மனித குலத்துக்குச் சிகிச்சை, ஆற்றல் மற்றும் சுற்றுலா போன்ற பல வழிகளில் பயனளிக்கின்றன. இலங்கையில் அமைந்துள்ள கன்னியா வெந்நீரூற்று, அதன் புவியியல் தனிச்சிறப்பு, வரலாற்றுப் பின்னணி மற்றும் மருத்துவப் பலன்களின் அடிப்படையில் முக்கியத்துவம் பெறுகிறது. எனினும், அதன் அசல் பண்பாட்டு அடையாளத்தைப் பாதுகாத்து, அதனை ஒரு நிலைத்த சுற்றுலாத் தளமாக மேம்படுத்துவது, எதிர்காலத்தில் நாம் எதிர்கொள்ள வேண்டிய ஒரு முக்கியச் சவாலாகும்.






# சுவிண்டன் தமிழ் வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா!

**(நடராஜா மலர்வேந்தன்)**

பசறை கல்வி வலயத்துக்கு உட்பட்ட லுணுகல, சுவிண்டன் தமிழ் வித்தியாலயம் ஏற்பாடு செய்த வருடாந்த பரிசளிப்பு விழா வித்தியாலய அதிபர் திருமதி. கே.சண்முகப்பிரியா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (14) லுணுகல பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது இவ்வருடம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள், இதர போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் மற்றும் பாடசாலை வளர்ச்சிக்குச் சேவையாற்றிய ஆசிரியர்கள் ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.


இந்த நிகழ்வில் பசறை வலயக் கல்வி பணிப்பாளர் ஸரீனா பேகம், உதவி கல்வி பணிப்பாளர்கள், ஏனைய பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.











# களிக்காடு மாவீரர் துயிலும் இல்லத்தில் மழைக்கு மத்தியிலும் சிரமதானப் பணி!

**(பா.சதீசன்)**

தமிழ் மக்களுக்கான உரிமைப் போரில் தமது உயிர்களை ஈகம் செய்த மாவீரர் களை போற்றி வணங்கும் மாவீரர் நாள் இவ்வாண்டும் கார்த்திகை 27 ஆம் திகதி தமிழர்கள் வாழும் தேசமெங் கும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அந்தவகையில் இவ்வாண்டும் மாவீரர் நாள் நிகழ்வுகள் மேற்கொள்ள தமிழர் தாயகப் பகுதிகள் மாத்திரமின்றி தமிழ் மக்கள் வாழும் தேசமெங்கும் தயாராகி வருகிறது. அந்தவகையில் முல்லைத் தீவு மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயி லும் இல்லங்களும் தயாராகி வருகின் றன.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட் டத்தில் களிக்காடு மாவீரர் துயிலும் இல் லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான ஏற்பாடு கள் பணிக்குழுவால் மேற்கொள்ளப் பட்டது.

மழைக்கு மத்தியில் சிரமதான பணி கள் நேற்று (16) மாலை ஆரம்பிக்கப் பட்டது

முன்னதாக மாவீரர்களுக்கு ஈகைச் சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தி மலர்வணக்கம் இடம்பெற்றதை தொடர்ந்து சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட் டன.

இவ்வாண்டும் கார்த்திகை 27 மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக இடம்பெறும் எனவும் அனைத்து மாவீரர்களது பெற் றோர்களையும் உறவுகளையும் கலந்து கொள்ளுமாறும் முன்னாயத்த பணி களிலும் ஒத்துழைப்பு வழங்குமாறும் பணிக்குழுவினர் தெரிவித்தனர்.





# கற்பிட்டியில் ஆரம்பிக்கப்பட்ட புத்தளத்தின் பசுமைத் திட்டம்







**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

புத்தளம் மாவட்டத்தில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை முன்னெடுக்கும் நோக்கோடு பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ் தலைமையில் புத்தளத்தில் உருவாக்கப்பட்டுள்ள புத்தளம் பசுமைக் கழகம் ஊடாக கற்பிட்டியில் மரக்கன்றுகள் நடும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இம்முறை க. பொ. த. (உ/த ) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு அவர்களின் பிரதேசங்களில் உள்ள பள்ளிவாயில்களில் நடுகை செய்வதற்காக நிலக்கடலை, பழ மரக்கன்றுகள் கற்பிட்டி வை.எம்.எம்.ஏ. கிளையால் அதன் கிளைத் தலைவர் ஓய்வு நிலை ஆசிரியர் ஏ.எச்.எம்.எம். ஷாபி தலைமையில் வழங்கப்பட்டன.

வழங்கப்பட்ட மரக்கன்றுகள் கற்பிட்டி புதுக்குடியிருப்பு சபா பள்ளிவாசலில் உயர் தர மாணவன் எம்.நுஸ்ரி, ஹுதா பள்ளிவாசலில் உயர் தர மாணவர்களான எம்.முஷாப், எம். அஷ்ரான், மஸ்ஜிதுல் மினன் ( கடற்கரை பள்ளிவாசல்) உயர்கல்வி மாணவன் எஸ். எம் மில்ஹான், கண்டக்குளி ஜும்ஆ பள்ளிவாசலில் பல்கலைக்கழகம் மாணவன் எம். பைசர், பள்ளிவாசல்துறை தெம்பிலிவத்தை பள்ளிவாசலில் உயர் தர மாணவன் எம் ஜபீஸ் ஆகியோரால் நடப்பட்டன என்று வை.எம்.எம்.ஏ. கற்பிட்டி கிளையின் செயலாளர் எம்.என்.எம். ஷிப்ராஸ் தெரிவித்தார்.

# வடமராட்சியின் இரண்டாவது கந்தபுராண விழா!









வடமராட்சி கந்தபுராண கழகம் நடத்திய இரண்டாவது கந்தபுராண விழா வடமராட்சி வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அதன் தலைவர் நாகப்பட்டினம் சோதிநாதன் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் இடம் பெற்றது.

விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு மங்கல சுடர்கள் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. பஞ்சபுராணம் ஓதுதல், வரவேற்பு நடனம், வரவேற்புரை தலைமையுரை என்பன இடம் பெற்றதை தொடர்ந்து விருதுகள் வழங்கிவைக்கப்பட்டன.

தொடர்ந்து விருதுகளை நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் செந்தமிழ் சொல்லருவி லலீசன், சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட வடமராட்சி வடக்கு பிரதி பிரதேச செயலர் தயானந்தன் ஆகியோர் பௌராணிகர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தனர்.

இதில் கச்சியப்ப சிவாசாரியார் விருதுகள் பௌராணிகர் சிவசிறி ராம் சபாநாதக் குருக்கள், பௌராணிகர் இராமநாதன் செல்வவிநாயகம், பௌராணிர் கிருஷ்ணசாமி பஞ்சலிங்கம், ஆறுமுகம் நவரத்தினசாமி ஆகியோருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

சைவத்தமிழ் நாயகி விருதைத் திருமதி தர்மலிங்கம் செல்வசோதிக்கும், பஞ்ச புராண வித்தகி விருது பௌராணிகள் திருமதி சி.சிவஞானாம்பிகைக்கும், புராண பரன பாதுகாவலன் விருதுகளை பௌராணிகர் கணேசமூர்த்தி புலேந்திரன், நாகதம்பி குமரேசு ஆகியோருக்கும் வழங்கப்பட்டன.

கந்தபுராண காதலன் எனும் விருது ஜெ.ஜெயமனோகரனுக்கும், பஞ்சபுராண பாதுகாவலன் விருது பௌராணிகர் சிவபாதம் தங்கமயிலுக்கும், கந்தபுராண காதலி விருது பௌராணிகர் திருமதி தங்கராசா தமிழரசுக்கும், சைவத்தமிழ் நாயகி விருது திருமதி ராதா குலோத்துங்கனுக்கும், கந்தபுராண காதலன் விருது தர்மலிங்கம் ரவீந்திரராசாவுக்கும் வழங்கப்பட்டன.

கருத்துரைகளை மூத்த பௌராணிகர் சபாரத்தினம் விநாயமூர்த்தி, ஞான பண்டித ஆன்மீக வித்தகர் ஆ.சிவநாதன், யாழ். கம்பன் கழக செயலாளர் தவராசா கருணாகரன், ஆவணக்காப்பக உரிமையாளர் சிவகடாட்சம் செந்தூரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையை வடமராட்சி வடக்கு பிரதேச பிரதி பிரதேச செயலர் தயானந்தனும், பிரதம விருந்தினர் உரையைக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபரும், நிகழ்வின் பிரதம விருந்தினருமான செந்தமிழ் சொல்லருவி லலீசனும் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தை சேர்ந்த ஆன்மீக செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



# சமூக அமைப்புகள், உள்ளூர் தலைவர்கள், அரச அதிகாரிகள் ஒன்றிணைந்து செயல்பட்டால் அபிவிருத்தி நிலையாகும்!

## அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். நியாஸ் தெரிவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

எந்தவொரு அனர்த்த நிலையிலும் மக்களின் உயிர் மற்றும் சொத்துக்களை பாதுகாப்பது மிக முக்கியம். அதற்காக வெள்ளபாதுகாப்புநிதிஒன்றைஉருவாக்குவதும், தேவைக்கேற்ப திறக்கவும் மூடவும் கூடிய மதகு வாயில் அமைப்புகளை நிறுவுவதும் அவசியமாகும். இது பிராந்திய மக்களுக்கு நிலையான பாதுகாப்பை வழங்கும். இந்த பணிகள் அனைவரதும் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டும்.

சமூக அமைப்புகள், உள்ளூர் தலைவர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோர் ஒன்றிணைந்து செயல்பட்டால் மட்டுமே அபிவிருத்தி நிலையானதாக அமையும். இதற்கான முறையான வேலைத் திட்டம் உருவாக்கப்பட்டு, உரிய அதிகாரிகளின் ஒப்புதலுடன் நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என்று அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். நியாஸ் தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேச செயலக எல்லைக்குள் அனர்த்த முகாமைத்துவ செயற்குழு ஒன்றை அமைப்பது தொடர்பான நிகழ்வுபிரதேசசெயலாளர்எம்.எம்.ஆஷிக் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். நியாஸ் இந்த கருத்துக்களை முன்வைத்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

"சாய்ந்தமருது போன்ற கடலோரப் பிரதேசங்களில் இயற்கை அனர்த்தங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. மக்கள், அரசு, மற்றும் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து செயல்பட்டால் தான் மக்களின் உயிர் மற்றும் சொத்துக்களை பாதுகாக்க முடியும். 2004 ஆம் ஆண்டு சுனாமி, 2010 வெள்ளம், மற்றும் அண்மையில் 2024-25 இல் ஏற்பட்ட வெள்ளம் ஆகிய அனர்த்தங்களில் சாய்ந்தமருது கடுமையாக பாதிக்கப்பட்டது. "இந்த அனுபவங்களே எங்களுக்கான விழிப்புணர்வையும், வலுவான முகாமைத்துவத் திட்டங்களையும் உருவாக்க வழி வகுத்தன.

நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக அதிகாரிகள், அனர்த்த நிவாரண சேவைகளை பொறுப்பாக மேற்கொண்டு வரும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், வர்த்தக சங்க உறுப்பினர்கள், சமூக சேவை அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர் அமைப்புகள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் பங்கு கொண்டிருந்தனர்.

உண்மையாகவே அனர்த்த முகாமைத்துவப் பணிகளில் ஈடுபடுவது எமது இளைஞர்களுக்கு கிடைத்த ஒரு அரிய வாய்ப்பாகும். 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி முதல் 2010 ஆம் ஆண்டு வெள்ளம், மேலும் அண்மையில் 2024-25 இல் ஏற்பட்ட வெள்ளம் வரை சாய்ந்தமருது பிராந்தியம் பல்வேறு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் எங்களது கவனம் தொடர்ந்து இப்பிராந்தியத்திலேயே மையப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில், இளைஞர்களை மையப்படுத்தி அனர்த்த அபாயக் குறைப்பு வேலைத் திட்டங்களை 2019 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து முன்னெடுத்து வருகிறோம். அம்பாறை மாவட்டத்தில் இதுவரை 250 இளைஞர்கள் 200 மணி நேர பயிற்சியுடன் உருவாக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று, அரசுத் துறைகளில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கும் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த பயிற்சிகள் இளைஞர்களின் திறனையும், அவசர நிலைகளில் செயல்படும் திறத்தையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை.

கடந்த 2024 இல் ஏற்பட்ட காரைதீவு சம்பவத்துக்குப் பின்னர், பிராந்திய இளைஞர்களுக்கு "Swimming and Diving" பயிற்சிகள் ஆறு மாத காலம் வழங்கப்பட்டன. அதில் 30 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் வெற்றிகரமாக பயிற்சி பெற்றனர். தற்போது அவர்கள் தேவையான சமயங்களில் கடற்படையுடன் இணைந்து பணிபுரியக் கூடிய திறனைப் பெற்றுள்ளனர். இத்தகைய திறமைகளை விரிவுபடுத்தும் நோக்கில் சாய்ந்தமருதியிலேயே புதிய பயிற்சித் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளோம். சுமார் 130 பேர் சாய்ந்தமருது மற்றும் கல்முனை பிரதேசங்களில் இருந்து விண்ணப்பித்துள்ளனர். இந்தப் பயிற்சி கட்டம் கட்டமாக நடத்தப்பட்டு, பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேலும், அவசர நிலை நடவடிக்கைகளில் ஆரம்ப எச்சரிக்கை அமைப்பு மற்றும் தகவல் பரிமாற்ற முறைகள் சிறப்பாக செயல்படுதல் அவசியம். கடந்த சில சம்பவங்களில் ஏற்பட்ட தொடர்பு குறைபாடுகள் பெரிய இழப்புகளுக்கு காரணமாகியுள்ளன. அவை மீண்டும் நிகழாத வகையில் இளைஞர்களுக்கு மீட்பு நடவடிக்கை, நீச்சல், தொடர்பு திறன் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். அதனுடன், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து சமூக மட்டப் பயிற்சிகளும், ட்ரோன் தொழில்நுட்பம் உள்ளிட்ட நவீன உபகரணங்கள் பற்றிய பயிற்சிகளும் வழங்கப்பட உள்ளன. அண்மையில் நடத்தப்பட்ட டைவிங் பயிற்சியில் பங்கேற்ற இளைஞர்கள் மிகச் சிறப்பாக செயல்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத்தில் ஒரு திறமையான, பயிற்சியுற்ற தொண்டர்களை உருவாக்கி, சாய்ந்தமருது பிரதேசத்தை அனர்த்த முகாமைத்துவத்தில் முன்னோடியாக மாற்றுவதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் தேவை.- என்றார்.

# முதல்வர் ஸ்டாலின், நடிகர் அஜித் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்

தமிழகத்தில் சமீப காலமாக அரசியல் தலைவர்கள், திரைப்பிரபலங்கள் என பலரது வீடுகள் மற்றும் அலுவலகங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

வெடிகுண்டு மிரட்டலை தொடர்ந்து, நிபுணர்களால் நடத்தப்படும் சோதனையில் அது உண்மைக்கு புறம்பானது என தெரியவருகிறது.

இதனை தொடர்ந்து வெடிகுண்டு மிரட்டல் விடுக்கும் மர்மநபர் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



இந்த நிலையில், இன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், நடிகர்கள் அஜித் குமார், அரவிந்த்சாமி, லிவிங்ஸ்டன், நடிகை குஷ்பு மற்றும் இயக்குநர் முருகதாஸ் ஆகியோரின் வீடுகளுக்கு, டி.ஜி.பி. அலுவலகத்திற்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து, வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்கள், பொலிஸார் சோதனை நடத்தினர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சோதனையில், வெடிகுண்டு மிரட்டல் செய்தி உண்மைக்கு புறம்பானது என தெரியவந்துள்ளது.

மிரட்டல் விடுத்த நபர் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# செங்கோட்டை கார் வெடிப்பு; காரின் உரிமையாளர் கைது

செங்கோட்டை தற்கொலை குண்டுதாரியுடன் தொடர்பில் இருந்ததாகக் கூறப்படும் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி தற்கொலை குண்டு வெடிப்பின் போது பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் கார் அவரது பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இந்தியாவின் தேசிய புலனாய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த சந்தேகநபர், இந்திய நிர்வாகத்திற்கு உட்பட்ட காஷ்மீரில் வசிப்பவர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 10 ஆம் திகதி டில்லியில் வெடிபொருள் நிரப்பப்பட்ட கார் வெடித்துச் சிதறியது. இதில் 13 பேர் உயிரிழந்தனர். காஷ்மீரின் புல்வாமாவை சேர்ந்த மருத்துவர் உமர் நபி, கார் குண்டு தாக்குதலை நடத்தியிருப்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது. இந்த வழக்கை தற்போது தேசிய புலனாய்வு அமைப்பு (என்.ஐ.ஏ) விசாரித்து வருகிறது. என்.ஐ.ஏ. நேற்று வெளியிட்ட அறிக்கையில், “டில்லி கார் குண்டு வெடிப்பு வழக்கில் முக்கிய குற்றவாளி அமீர் ரஷித் அலி கைது செய்யப்பட்டு உள்ளார்.

டில்லி குண்டுவெடிப்புக்கு பயன்படுத்தப்பட்ட கார், இவரது பெயரில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. ஜம்முவின் சம்போரா பகுதியை சேர்ந்த அமீர் ரஷித் அலி டில்லிக்கு வந்து ஐ 20 காரை வாங்கி தனது பெயரில் பதிவு செய்துள்ளார். இந்த காரிலேயே வெடிபொருள்கள் நிரப்பப்பட்டு குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டு இருக்கிறது. இவருக்கும் மருத்துவர் உமர் நபிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

வழக்கு தொடர்பாக இதுவரை 73 பேரிடம் விசாரணை நடத்தி உள்ளோம். இதே வழக்கு தொடர்பாக டில்லி, ஜம்மு காஷ்மீர், ஹரியானா, உத்தர பிரதேச பொலிஸாரும் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

டில்லியை போன்று நாடு முழுவதும் கார்களை பயன்படுத்தி வெடிகுண்டு தாக்குதலை நடத்த ஜெய்ஷ் தீவிரவாத அமைப்பு சதித் திட்டம் தீட்டியிருந்தது என என்.ஐ.ஏ. விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதைத் தொடர்ந்து டில்லியில் கேட்பாரற்று நிறுத்தப்பட்டுஇருக்கும் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன. சந்தேகத்துக்கு உரிய 34 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கார் குண்டுவெடிப்பை நடத்திய உமர் நபி, பரிதாபாத்தில் தங்கியிருந்த வீட்டில் ரகசியமாக ஓர் ஆய்வகத்தை அமைத்துள்ளார். அவர் வெடிகுண்டு சோதனை நடத்தி வந்தமையும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

# 2026 அமைச்சரவையில் தே.மு.தி.க இடம்பெறும்!



## பிரேமலதா நம்பிக்கை

எதிர்வரும் 2026 தமிழக அமைச்சரவையில் தே.மு.தி.க .இடம்பெறும் வாய்ப்பு உருவாகும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா தெரிவித்தார்.

தே.மு.தி.கவின் ‘இல்லம் தேடி, உள்ளம் நாடி’ சுற்றுப் பயணத்தின் 3 ஆம் கட்ட பிரச்சாரத்தை மதுரையில் கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் நேற்று தொடங்கினார். முன்னதாக, மாநகர் தெற்கு மாவட்டம் சார்பில் கூடல்நகரில் நடந்த பூத் கமிட்டி நிர்வாகிகள் கூட்டத்தில் அவர் உரையாற்றுகையில்,

“டிசம்பர் 28 இல் விஜயகாந்த் குருபூஜையும், ஜனவரி 9 இல் கடலூரில் கட்சி மாநாடும் நடக்கிறது. தமிழகம் முழுவதும் மற்ற கட்சிகளுக்கு இணையாக பூத் கொமிட்டி அமைத்துள்ளோம். தேர்தலுக்கு தயாராகுங்கள். முன்கூட்டியே தேர்தல் வரலாம். எஸ்.ஐ.ஆர். குறித்து விமர்சனம் இருந்தாலும், தனக்கு மட்டுமின்றி குடும்பத்தினருக்கும் வாக்கை தவறவிடாமல் உறுதி செய்யுங்கள்.

நாம் இடம்பெறும் கூட்டணியே ஆட்சி அமைக்கும். இங்கு உள்ளவர்கள் எம்.எல்.ஏ. ஆகலாம். கூட்டணி அமைச்சரவையில் இடம்பெறும் வாய்ப்பும் கிடைக்கும்.” என்று தெரிவித்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“தேர்தலில் என்ன நடக்கப் போகிறது என்பதை கணிக்க முடியாது. தேர்தல் முடிவுக்கு பிறகு எதுவும் நடக்கலாம். 2026 இல் கூட்டணி அமைச்சரவை அமையவே நிறைய வாய்ப்பு உள்ளதாக சொல்கின்றனர். மதுரை மத்தி, திருப்பரங்குன்றம் ஆகிய தொகுதிகள் ஏற்கெனவே தேமுதிக வென்ற தொகுதி என்பதால், அங்கு என்னை போட்டியிடுமாறு கட்சியினர் விரும்புகின்றனர். கடவுள் அருள் இருந்தால் நானோ, எனது மகனோ போட்டியிடுவோம். பிஹார் சட்டப்பேரவைத் தேர்தல் வெற்றிக்கு நிதிஷ்குமார் மட்டுமின்றி, பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் காரணம்.

நாங்கள் தினமும் 3 செய்தியாளர்கள் சந்திப்பு கூட்டத்தை நடத்துகிறோம். அதேபோல் த.வெ.கவும் நடத்த வேண்டும். விஜய் களத்துக்கு வர வேண்டும். தமிழகத்துக்கு வரவேண்டிய முதலீடு ஆந்திராவுக்குச் சென்றது கவலை அளிக்கிறது. உரியவர்கள் தான் இதற்கு பதில் சொல்ல வேண்டும். தேர்தல் முறைகேடுகளைத் தடுக்க தேர்தல் ஆணையம் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.” என்றார்.





# மக்காவுக்கு புனித யாத்திரை சென்ற பஸ் டீசல் கொள்கலனுடன் மோதி விபத்து

## 42 இந்தியர்கள் பலி

சவூதியில் பஸ்ஸும் டீசல் கொள்கலனும் மோதி விபத்திற்குள்ளானதில் 42 இந்தியர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஐதராபாத்திலிருந்து மக்காவுக்கு புனிதப்பயணம் சென்ற பயணிகளின் பஸ் மீது டீசல் கொள்கலன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

நள்ளிரவில் ஏற்பட்ட இந்த விபத்தில் 20 பெண்கள் மற்றும் 11 குழந்தைகள் உயிரிழந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தை சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

விபத்துக்கான காரணம் குறித்து இதுவரை தகவல் வெளியாகவில்லை என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்து குறித்து வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "மதினாவில் இந்தியர்கள் சென்ற வாகனம் விபத்துக்குள்ளான நிகழ்வை அறிந்து மிகுந்த அதிர்ச்சியடைந்தேன். ரியாத்தில் உள்ள நமது தூதரகமானது, ஜெட்டா தூதரக அதிகாரிகளுடன் ஆலோசனையில் உள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு அரசு முழு ஆதரவை அளிக்கும். அவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய விழைகிறோம்." என்று தெரிவித்துள்ளார்.

இதுபற்றி பேசிய ஹைதராபாத் எம்.பி அசாதுதீன் ஒவைசி தெரிவிக்கையில், "மக்காவிலிருந்து மதீனாவுக்குச் சென்ற 42 ஹஜ் யாத்ரீகர்கள் தீப்பிடித்து எரிந்த பஸ்ஸில் இருந்தனர். ரியாத்தில் உள்ள இந்தியத் தூதரகத்தின் துணைத் தலைவர் அபு மதன் ஜார்ஜிடம் பேசினேன். இந்த விஷயம் குறித்த தகவல்களை அவர்கள் சேகரித்து வருவதாக அவர் எனக்கு உறுதியளித்தார். ஹைதராபாத்தை சேர்ந்த இரண்டு பயண நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு, பயணிகளின் விவரங்களை சேகரித்து, ரியாத் தூதரகம் மற்றும் வெளியுறவுச் செயலாளருடன் பகிர்ந்து கொண்டேன்.

மத்திய அரசு, குறிப்பாக வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், உயிரிழந்தோரின் உடல்களை இந்தியாவுக்குக் கொண்டு வரவும், யாராவது காயமடைந்தால், அவர்களுக்கு முறையான மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதி செய்யவும் நான் கேட்டுக்கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

சவூதி அரேபியாவில் நடந்த பேருந்து விபத்து குறித்து தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டியும் இரங்கல் தெரிவித்துள்ளார். முதல்வர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில்,

"டி.ஜி.பி. மற்றும் அதிகாரிகள் விபத்தில் நமது மாநிலத்தைச் சேர்ந்த எத்தனை பேர் பாதிக்கப்பட்டனர் என்பது குறித்த விவரங்களைச் சேகரித்து உடனடியாக வழங்க வேண்டும். இதுகுறித்து தலைமைச் செயலகத்தில் ஒரு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டது. ரியாத்தில் உள்ள இந்திய தூதரகத்துடன் தொடர்பில் இருக்கிறோம். புதுடெல்லியில் உள்ள அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்துள்ளோம். தூதரக அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்ற மாநில அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.




# 18 வயது நிரம்பியவர்களுக்கு கட்டாயமாக இராணுவ சேவை

## ஜெர்மனி அரசாங்கத்தின் முடிவால் அதிர்ச்சி

ஜெர்மனி இராணுவத்தில் தற்போது சுமார் 182,000 வீரர்கள் உள்ள நிலையில், மேலும் இராணுவ பலத்தை அதிகரிக்க எடுத்த தீர்மானம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையே, நேட்டோ கூட்டணி நாடுகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்த நேரிடும் என ஜெர்மனி இராணுவ தலைவர் கார்ஸ்டன் ப்ரூயர் எச்சரிக்கை விடுத்தார்.

இதனால் வலிமையான இராணுவத்தை உருவாக்க ஜெர்மனி அரசாங்கம் முடிவு செய்தது.

இதற்காகக் கட்டாய இராணுவ சேவை திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்த உள்ளது.



அதன்படி, 18 வயது நிரம்பிய அனைவரும் இராணுவத்தில் சேர்வதற்கான தகுதியை மதிப்பிடுவதற்கு மருத்துவ பரிசோதனையை எடுக்கவேண்டும்.

இந்த இராணுவ சேவையானது ஆண்களுக்குக் கட்டாயமாகவும், பெண்களுக்கு விருப்ப அடிப்படையிலும் இருக்கும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சட்டமூலம் இந்த ஆண்டு இறுதிக்குள் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் எனக் கூறப்படுகிறது.

இதன்மூலம் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் இராணுவ வீரர்களின் எண்ணிக்கையை 260,000 உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

அதேசமயம் இடதுசாரி கட்சியினர் இந்த கட்டாய இராணுவ சேவைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹஸீனாவிற்கு மரண தண்டனை

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹஸீனாவுக்கு அவரது அரசாங்கம் கடந்த ஆண்டு மாணவர் தலைமையிலான போராட்டங்களை வன்முறையாக ஒடுக்கியதில் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை செய்ததாகக் கூறி, அந்நாட்டின் சர்வ தேச குற்றவியல் தீர்ப்பாயம் இன்று மரண தண்டனை விதித்துத் தீர்ப் பளித்தது.

78 வயதான தலைமறைவு அரசி யல்வாதியான ஷேக் ஹஸீனா, கடந்த ஆண்டு நடந்த போராட்டங்களை ஒடுக்கியதில் சூத்திரதாரி மற்றும் முக்கியக் கருவியாக இருந்ததார் என குற்றம் சாட்டப்பட்டார்.

கடந்த ஆண்டு ஜூலை 15 முதல் ஆகஸ்ட் 5, வரை நடந்த இந்த மக்கள் போராட்டங்கள் ஒடுக்கியதில், சுமார் 1,400 பேர் வரை கொல்லப்பட்டனர் என்றும் ஆயிரக்கணக்கானோர் காய மடைந்தனர் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை தெரிவிக்கிறது.

தனது 15 ஆண்டுகால சர்வாதிகார ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்த போராட்டங்களை ஒடுக்குவதற்காக அவர் கொடிய சக்தியைப் பயன்படுத்த நேரடி உத்தரவுகளைப் பிறப்பித்ததற் கான ஆதாரங்களை வழக்குத் தொடு நர்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த னர்.

அதிகாரத்தை இழந்ததிலிருந்து இந்தியாவில் தலைமறைவாக இருக் கும் ஷேக் ஹஸீனா, நீதிமன்ற உத்தர வுகளை மீறி விசாரணைக்கு முன்னி லையாகாததால், அவர் தலைமறை வாக இருக்கும் நிலையிலேயே இந்த விசாரணை நடத்தப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது தடை செய்யப்பட்டுள்ள ஷேக் ஹஸீனாவின் அவாமி லீக் கட்சி டாக்கா தீர்ப்பாயத்தை கங்காரு நீதிமன்றம் என்று விமர்சித்துள்ள துடன், தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித் துப் போராட்டம் நடத்துமாறு ஆதரவா ளர்களை வலியுறுத்தியுள்ளது.

தீர்ப்பையொட்டி பங்களாதேஷ் முழுவதும் பதற்றம் நிலவுவதாகவும், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள தாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




# கனடா முரசு

திங்கட்கிழமை | 17/11/2025

**கனடாவில் இடம்பெற்ற தீ விபத்தில் பெண் பலி**

கனடாவில் இடம்பெற்ற தீ விபத்தில் வயோதிப பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 11 மணியளவில் டொராண்டோ - யார்க்வில் பகுதியில் 02▶



# ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் கனடாவில் தடுத்து நிறுத்தப்பட்டார்

## பாதுகாப்பு அச்சுறுத்தல் என தெரிவிப்பு

பாலஸ்தீனியர்களுக்கு எதிரான இஸ்ரேலின் அத்துமீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளராக முன்னதாக பணியாற்றிய அமெரிக்காவைச் சேர்ந்த சர்வதேச சட்ட நிபுணர் ரிச்சர்ட் ஃபாக், தான் கனடாவில் தடுத்து வைக்கப்பட்டு தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் என்ற அடிப்படையில் விசாரிக்கப்பட்டேன் என்று தெரிவித்துள்ளார்.

95 வயதான ரிச்சர்ட் ஃபாக், சட்ட அறிஞரான அவரது மனைவி ஹிலால் எல்வருடன் டொரண்டோ பியர்சன் விமான நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை தடுத்து வைக்கப்பட்டார். 02▶






# குழந்தைகளுக்கான பால் மா தொடர்பில் கனேடிய மக்களுக்கு எச்சரிக்கை விடுப்பு

குழந்தைகளுக்கான பால் மா தொடர்பில் கனேடிய மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கான பால் மா ஒன்றின் தயாரிப்பு திரும்பப் பெறப்பட்டுள்ளதாக கனேடிய உணவு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் ஏற்பட்ட பொட்லிசம் நோய் பரவலுடன் தொடர்புடையதாக இந்த பால் மா அமைந்துள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரபல நிறுவனமான பைஹார்ட் நிறுவனம் அமெரிக்காவில் விற்பனையான அதன் அனைத்து தயாரிப்புகளையும் நவம்பர் 11ஆம் திகதி திரும்பப் பெற்றது.

இதற்கு முன்னர், சில தயாரிப்புகள் குழந்தைகளுக்கு பொட்லிசம் நோயை ஏற்படுத்தியதாகக் கூறப்பட்ட பின்னணியில் அவை திரும்பப் பெறப்பட்டிருந்தன.

எனவே, இந்த தயாரிப்பை பயன்படுத்த வேண்டாம் எனவும், குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டாம் எனவும் கனேடிய மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.




# கனடாவில் 6 புதிய பகுதிகளில் லித்தியம் கண்டுபிடிக்கப்பட்டது

கனடாவில் 6 புதிய பகுதிகளில் தூய்மையான லித்தியம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

கனடாவின் வடக்கு ஒன்ராறியோ மாநிலத்தில் உள்ள ஜாக்பாட் சொத்து பகுதியில், உயர் தூய்மையான லித்தியம் கொண்ட பாறைகள் நிறைந்த 6 புதிய வளங்கள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன.

இது, கனடாவின் மின்கல உற்பத்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேமிப்பு துறைகளுக்கு மிகப்பெரிய முன்னேற்றமாகக் கருதப்படுகி றது.

இந்த புதிய இலக்குகள், ஏற்கனவே திறந்த குழி முறையில் சுரங்கம் செய்யக்கூடிய வளங்களின் அருகே அமைந்துள்ளதால், எதிர்காலத்தில் பகிரப்பட்ட அடிப்படை வசதிகள் மற் றும் லாஜிஸ்டிக்ஸ் மூலம் சுரங்கப்பணி எளிதாகும்.

ஜார்ஜியா லேக் பகுதியில், லித்தியம் தாதுக்கள் பொதுவாகக் காணப்படும் பெக்மடைட் கற்களில் இந்த வளங்கள் அடையாளம் காணப்பட் டுள்ளன.

P&E Mining Consultants Inc. நிறுவனம், இந்த திட்டத்தின் மினரல் வள மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளது.

தற்போதைய மதிப்பீட்டின் படி, 3.4 மில்லியன் short tons (indicated) 0.85 சதவீதம் Lithium oxide மற்றும் 5.8 மில்லியன் short tons (inferred) 0.91 சதவீதம் Lithium oxide உள்ளது.

இங்கு காணப்படும் லித்தியம் தாது spodumene ஆகும். ஆய்வக சோதனைகள், இதனை 6 சதவீதம் Lithium oxide concentrate-ஆக மேம்படுத்த முடியும் எனவும், சுமார் 81.5 சதவீதம் மீட்பு விகிதம் கிடைக்கும் எனவும் காட்டுகின்றன.

அமெரிக்க புவியியல் ஆய்வு (USGS) 2025 அறிக்கையின் படி, உலகளவில் உற்பத்தியாகும் லித்தியத்தில் 87 சதவீதம் பேட்டரிகளில் பயன்படுத்தப் படுகிறது.

இதனால், கனடாவின் இந்த புதிய கண்டுபிடிப்பு, மின்சார வாகனங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேமிப்பு துறைகளுக்கு முக்கிய ஆதாரமாக இருக்கும்.

புதிய வளங்கள், சுமார் 72.6 சதுர மைல் பரப்பளவில் பரவியுள்ளதால், எதிர்காலத்தில் மேலும் விரிவான சுரங்கப்பணி மேற்கொள்ள வாய்ப்பு உள்ளது.

## ஐ.நாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காஸா விவகாரத்தில் கனடாவின் பொறுப்பு குறித்து ஆராயும் பாலஸ்தீன தீர்ப்பாயத்தில் பங்கேற்பதற்காக இவர்கள் ஒட்டாவாவுக்குப் பயணம் செய்தபோது இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

பாதுகாப்பு அதிகாரி ஒருவர் நீங்கள் இருவரும் கனடாவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம் என்று கூறினார் என்றும் இது தன் வாழ்வில் முதன்முறையாக பெற்ற அனுபவம் எனவும் ஃபாக் அல் ஜசீராவுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்,

கனடாவில் நான்கு மணி நேரத்திற்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டு, இஸ்ரேல்-காஸா பற்றிய அவர்களின் பணிகள் மற்றும் இனப்படுகொலை பற்றியகேள்விகள்கேட்கப்பட்டதாகவும், இந்தக் கேள்விகள் ஒழுங்கற்றதாக இருந்ததாகவும் அவர் கூறினார்.

இந்த விசாரணை, காஸாவில் உண்மையைப் பற்றிப் பேச முயற்சிப்பவர்களைத் தண்டிக்க நடக்கும் உலகளாவிய முயற்சியின் ஒரு பகுதியெனத் தாம் நம்புவதாகவும் ரிச்சர்ட் ஃபாக் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து கனடா எல்லைச் சேவைகள் நிறுவனம் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டாலும், அனைத்துப் பயணிகளும் இரண்டாம் நிலை ஆய்வுக்கு உட்படுத்தப்படுவது சாதாரண செயல்முறை என்று கூறியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.





## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளது.

வீடொன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 84 வயதான வயோதிப பெண் உயிரிழந்துள்ளார்.

தீ விபத்தில் காயமடைந்த குறித்த பெண் மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மரணம் 2025 ஆம் ஆண்டில் நகரத்தில் ஏற்பட்ட 15 ஆவது தீ மரணம் என டொராண்டோ தீயணைப்புத் தலைவர் ஜிம் ஜெஸ்ஸோப் தெரிவித்துள்ளார்.

இதனிடையே தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

விசாரணை நடைபெற்று வருவதால் வீட்டின் அருகாமையில் காணப்படும் சில வீதிகள் மூடப்பட்டன.



# அமெரிக்காவுக்கு சுற்றுலா சென்ற கனேடியர்கள் கடலில் மூழ்கி பலி

அமெரிக்காவுக்கு சுற்றுலா சென்ற கனேடியர் ஒருவரும் அவரது மகளும் கடலில் மூழ்கி பலியான சம்பவம் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கச் சுற்றுலா சென்ற கனேடியர் கனடாவின் கால்கரியைச் சேர்ந்த யூஜி ஹு (வயது 39) என்பவர், தன் மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுடன் அமெரிக்காவுக்கு சுற்றுலா சென்றுள்ளார்.

வெள்ளிக்கிழமை மதியம் சுமார் 1.00 மணியளவில், யூஜி குடும்பம் கலிபோர்னியாவிலுள்ள கடற்கரை ஒன்றிற்குச் சென்றுள்ளது.

திடீரென, தண்ணீரில் விளையாடிக்கொண்டிருந்த யூஜியின் 5 வயது மகளை அலை இழுத்துச் செல்ல, மகளைக் காப்பாற்ற கடலில் இறங்கியுள்ளார் யூஜி.

ஆனால், அலை அவரையும் இழுத்துச் சென்றுவிட்டது. கணவனும் மகளும் கண் முன்னே அடித்துச் செல்லப்படுவதைக் கண்ட யூஜியின் மனைவி கடலுக்குள் இறங்கி அவர்களைக் காப்பாற்ற முயன்றுள்ளார். ஆனால், அவரால் எதுவும் செய்ய இயலாமல் அவர் கரைக்கே திரும்பிவிட்டிருக்கிறார்.

அந்த நேரத்தில், கடலில் 15 முதல் 20 அடி உயரத்துக்கு அலை எழுந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், அங்கு வந்த lifeguard ஒருவரும், மற்றொரு நபரும் கடலுக்குள் இறங்கி யூஜியை மீட்டு கரைக்குக் கொண்டுவந்துள்ளார்கள்.

யூஜியும் அவரது மனைவியும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், யூஜி ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

பெற்றோருடன் சென்ற 2 வயதுக் குழந்தை கடலில் இறங்கவில்லை. அந்தக் குழந்தை பாதுகாப்பாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரவு 9.00 மணி வரை தேடியும் அலையில் இழுத்துச் செல்லப்பட்ட தம்பதியின் 5 வயது மகள் கிடைக்கவேயில்லை.

சுற்றுலா சென்ற இடத்தில் தந்தையும் மகளும் பலியான சம்பவம் அதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

